# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 146/ந/2024

நாள் : 19.09.2024

திரு.J.சமியுல்லா ஷெரிப்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம் – மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம் – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காட்டைச்சேர்ந்த திரு.J.சமியுல்லா ஷெரிப் என்பவர் தனது நாளிடப்படாத மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" I am hereby submitting by complaint/grievance regarding illegal encroachment and also construction of building in common public street by private person which obstruct and restrict my movement towards my plot/house where I residing also inconvenient to others. In this regard self submitted request vide petition dt. 02.07.2020 also dt. 12.10.2020 address to Arcot Municipal Commissioner to stoppage of illegal construction and clearance of illegal encroachment. Since Arcot Municipal officials not initiated any action, to stop the construction, lawyer notice dt. 07.07.2020 issued to all concerned. For Lawyer notice Regional Director for Municipal Administration, Vellore issued IOM dt,. 15.07.2020 to Arcot Municipality for taking suitable immediate action. I am trying all possibilities including legal action as the concerned Municipal officials are not taking any step as committed and not exercising their powers to clear encroachment as per field report given by the land Inspector dt. 09.07.2022. I am appealing you for considering my grievance and passing suitable orders for clearing encroachment."

மேற்கண்ட புகார் மனு மீது ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் 10.01.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. அவர் தனது 20.02.2024 நாளிட்ட அறிக்கையில், திரு.J.சமியுல்லா ஷெரிப் என்பவர் கடந்த ஏப்ரல் 2022 ஆம் ஆண்டு இராணிப்பேட்டை மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கானது தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என தெரிவித்துள்ளார்.

**ஆணை**

மனுதாரர் தன்னுடைய மனுவிலும், ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, இராணிப்பேட்டை மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S. 50/2022 நிலுவையில் உள்ளதாக சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

2) இம்மாதிரியான நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2015, பிரிவு 10(3)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

a) x x x

b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act 1952 or any matter pending before a court

c) x x x

எனவே மேற்கண்ட சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரின் மனு மீது விசாரணை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ம் ஆண்டு, செப்டெம்பர் 19–ம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.J.சமியுல்லா ஷெரிப்,
10, மேஸ்திரி லத்திப் வீதி ,ஆற்காடு – 632 503.
இராணிப்பேட்டை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, ஆற்காடு.
இராணிப்பேட்டை மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனி செயலர்

நகல். இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/9/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)